**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**CC.624/2018**

**Prosecution Witness : 5**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : குணசேகரன் | **Caste** | : | |
| **Father's Name** | : நாகரத்தினம் | **Calling** | : | கூலி |
| **Village** | : எருமைக்காரத்தெரு | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | 69/2026 |
| | | **Dated** | : | 23.02.2026 |

**23.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–10 **திரு. குணசேகரன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 5**ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 355 BNSS petition filed and allowed.3ம் எதிரி இறப்பு . charege abated.**
**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் எருமைக்காரத்தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்துவருகிறேன். கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை. காலை 08.00 மணியளவில் நானும் பாண்டியராஜனும் திருச்சி ரோடு மேம்பாலம் கீழ் வந்துகொண்டிருந்தபோது போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அவர் திருட்டுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர் என்று வாக்குமூலம் கொடுத்தார். செயின் மற்றும் செல்போன் இருசக்கர வாகனத்தை ஒப்படைத்தார்.அந்த பொருட்களை அத்தாட்சி தயார்செய்து கைப்பற்றி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது

கையொப்பம் என்னுடையது. 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மற்றும் 09.00 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.6 ஆகவும் 09.00 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகவும் 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எதிரிகளை பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களிடம் இருந்து போலிசார் என்ன பொருட்கள் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கைப்பற்றும்போது நான் பொருட்களை பார்க்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி எங்கு வைத்து தயார்செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.23 11:01:43 +0530

Judicial Magistrate No.II
Dindigul.